தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருச	திருவள்ளுவர் யாண்டு உயகஉ இரௌத்திரி மாசி-பங்குனி 1981 பிப்ரவரி -- மார்ச் -- ஏப்ரல்.	மலர் கக-கஉ

சிலம்பு தரும் அடைகள்

புலவர் ம. இலக்குமிநாராயணன்,

எம். ஏ., பி. டி.,

தமிழ்ப்பேராசிரியர்,

தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

முன்னுரை

"ஒருப் தமிழ் ஒருமூன்றும்
உலகு இன்புற வகுத்துச்
சேரன் தெரித்த சிலப்பதி காரம்"

என்றும்,

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்"

என்றும் இசையால் நின்று வாழும் அறிஞர்களால் பாராட்டப் பெற்ற பெருமையுடையது சிலப்பதிகாரம்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை"

என்று மூன்று பெரும் புலவர்களில் ஒருவராக வைத்துப் பாரதியாரால் போற்றப்பட்ட இளங்கோவடிகள் இதன் ஆசிரியர். சங்க காலத்தில் தனிப்பாடல்களே மிகுந்திருக்க, ஒரு கதையைப் பல தனிப்பாடல்களால் சொல்லியிருப்பது சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்பாகும். தமிழில் எழுதப்பட்ட முதல் தொடர்நிலைச் செய்யுள் என்று இதனைக் கூறுவர்.

ஆராய்ச்சி

சிலப்பதிகாரத்தைப் பற்றியும், இதன் ஆசிரியரைப் பற்றியும், இக்கதையில் உறுப்பினர்களைப்பற்றியும் எழுந்த ஆராய்ச்சிக் கருத்துரைகளும், பட்டி மண்டபங்களும், திறனாய்வு நூல்களும் அளவிறந்தன. ஆற்றல்சால் அறிஞர்கள் பலர் தத்தம் பார்வையில் சிலப்பதிகாரத்தைக் கண்டு, தாம் பெற்ற பேற்றினை வையகம் பெற வேண்டும் என்ற ஆவலால் பல நூல்களை ஆக்கித் தந்துள்ளனர். இன்றளவும் அத்தகைய பணி தொடர்கிறது. எண்ணிக்கை கடந்த பலர் சிலப்பதிகாரத்தைத் தம் நுண்மாண் நுழைபுலங் கொண்டு திறனாய்வு செய்து விட்டபோதிலும், தொட்டனைத்தூறும் மணற்கேணிபோலச் சிலப்பதிகாரத்திலிருந்து புதிய கருத்துகள், சிந்தனைக்கு விருந்தாகக் குவிந்த வண்ணம் இருக்கின்றன. அறிதோறும் அறியாமை கண்டற்றால், சிலப்பதி காரத்தைப் படிக்கப் படிக்கச் சுவைதரும் ஐயங்களும் முடிவுகளும் புதிது புதிதாகக் கிடைக்கின்றன. நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு சொல்லும் இளங்கோவடிகளின் அளக்கலாகா அறிவு நிலையினை விளக்குவதாகவே அமைகிறது. இக்கட்டுரையில் சிலம்பில் இடம் பெறும் அடைமொழிகளின் இயல்புகளை மட்டும் கண்டு மகிழலாம்.

அடைகள்

சங்க காலம் தொட்டு இற்றைநாள்வரை அடைமொழிகள் இடம்பெறாத செய்யுள்களே இல்லை எனலாம். ஒவ்வொரு புலவரும் தத்தமக்குத் தோன்றியபடி இவ்வடைகளைத் தத்தம் செய்யுள்களில் அமைத்துள்ளனர். ஆயினும் பொருளை விளக்கத் துணையாகவே அடைமொழிகள் அமைய வேண்டும் என்ற கருத்தில் எவர்க்கும் வேறுபாடில்லை. சங்கச் சான்றோர்கள் இவ்வடை மொழிகளை அருகியே பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் தம் செய்யுள்களில் இடம் பெறும் விலங்குகளையும் பறவைகளையும் படிப்போர் தம் கண்முன் கொண்டுவரவேண்டி, அடைமொழி என்னும் வண்ணத்தால் சொற்சித்திரம் தீட்டிக் காட்டி யுள்ளனர் அவ்வுயிரினங்களைப் பார்க்கும் பேறு பெறாதோர்க்கும், அடைக ளோடு கூடிய அந்தச் செய்யுள் அடிகளைப் படித்தமட்டிலே, அவ்வுயிரினங்கள் இத்தன்மையின என்று உணர்ந்துகோடல் எளிதாகும். பெரும்பாலும் இந்தக் குறிக்கோளின் அடிப்படையிலேயே தொகை நூல்களில் அடைமொழிகள் அமைந்துள்ளன.

சங்க நூல்களில் அடைகள்

சங்க நூல்களில் இடம் பெற்றுள்ள அடைகள் ஒரு சீர் முதல் பல சீர்கள் வரை காணப்படுகின்றன. சில சான்றுகள் இக் கருத்தினைத் தெளிவாக்கும்

முறஞ்செவி யானை
(புறம்: 339; 13)

வள்ளெயிற்றுச் செந்நாய்
(அகம்: 53; 6)

புன்றலை மடப்பிடி
(அகம். 68; 18)

எனவரும் தொடர்கள் முறையே யானை, நாய், பிடி ஆகிய விலங்குகளின் இயல்புகளை ஓரிரு சீர்களில் தெளிவாகக் காட்டுகின்றன.

இரும்புஇயன் றன்ன கருங்கோட்டு எருமை
(அகம்: 56; 3)

தூமயிர்க் குறுந்தாள்
நெடுஞ்செவிக் குறுமுயல்
(புறம்: 334; 25)

நரந்தம் நாறும் குவையிருங் கூந்தல்
(குறு: 52; 3)

எனவரும் நீண்ட தொடர்கள் மேலும் சற்றுத் தெளிவான காட்சியைத் தரத் துணையாகின்றன.

உலகுடன் திரிதரு பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன்
(அகம்: 78: 15-16)

அறுநான் கிரட்டி இளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர்
(திருமுருகு: 179-182)

எனவரும் அடிகள் புலவர் விளக்க நினைத்த பொருளைப்பற்றிய எல்லாச்செய்திகளையும் சுருக்கமாகச் சூத்திரம் போல் அறிவித்து விடுகின்றன

வளர்ச்சி

சங்ககாலப் பாடல்கள் அடியளவு மிகுந்தன அல்ல. பத்துப் பாட்டையும், பரிபாடலையும் நீக்கிப்பார்த்தால், ஏனையவற்றுள் அகநானூற்றிலும் புறநானூற்றிலும் கலித்தொகையிலும்தான் அதிக அடிகளை உடைய பாடல்களைப் பார்க்கமுடியும். சுருக்கமாகத் தங்கள் கருத்துகளைச் சொல்வதில் சிறப்பு பெற்ற சங்கச் சான்றோர் கள் கருத்துகளை விளக்க அடைகளைப் பயன்படுத்தினர். பல அடி களுக்கு விரித்துச் சொல்ல வேண்டிய கருத்துகள் அடைகள் மூலம் ஓரிரு சீர்களில் குறிக்கப் பெற்றன. சொற்சுருக்கத்தோடு மட்டு மன்றிப் படிப்போரின் சிந்தனை வளர்ச்சிக்கும் அடைகள் பயன் தந்தன. சங்க காலத்திற்குப் பின்வந்த சிலப்பதிகாரம் போன்ற தொடர்நிலைச் செய்யுள்களில், உறுப்பினர்களின் குண நலன்களை விளக்க இவ்வடைகள் ஆற்றிய பங்கு பெரிதாகும்.

அடிகளின் திறன்

சங்கப் புலவர்கள் பெரும்பாலும் உயிர்ப்பொருள்களை விளக்கவே அடைகளைப் பயன்படுத்தினர். விலங்கு, பறவை, மரம், செடி, பூ முதலியவை படிப்போர் மனக்கண்ணில் தங்குமாறு அடைகளோடு புணர்த்தி எழுதப்பட்டன. அடிகளோ அடைகள் தரும் பெரும்பயனை உணர்ந்து, அதில் ஈடுபட்டு, உயிரல் பொருள்களான அமளி, குழல், யாழ் தெரு, ஆறு முதலியவற்றை யும் அடைகள் தந்து கூறியுள்ளார். செய்யுளில் ஓரடியில் சீர்கள் குறைந்து வரின் அவ்வடியினை நிறைவு செய்ய வேண்டித் தேவை யற்ற அடைகளைத் திணித்தல் இளங்கோவின் இயல்பன்று.

சிலப்பதிகாரக் கதை மிகவும் சுருக்கமானது. அதனை முப்பது காதைகளில் கூறவேண்டும் என்று அடிகள் வகுத்துக் கொண்ட தால், ஒவ்வொரு காதையிலும் கதைப்பகுதி சில அடிகளிலேயே முடிவதாகிவிட்டது. சங்ககாலத் தனிப்பாடல்களின் அமைப்பி லிருந்து விடுபடாமல் காப்பியம் செய்யத் துணிந்த அடிகளுக்குக் கதையை விரித்துக் கூற அடைகளே துணையாயின. ஆயினும், அடிகள் தம் திறமையால், எண்ணற்ற அடைகளை, இன்றியமை யாதன என்ற எண்ணம் படிப்போர்க்குத் தோன்றுமாறு அமைத் துள்ளார். கருத்துச் சுருக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட அடை கள், கருத்தை விரிவாக விளக்குவதற்கும் பயன்பட்டமையைச் சிலப்பதிகாரத்தால் அறிய முடிகிறது.

அடைகளின் வகைகள்

சிலப்பதிகாரத்தில் ஏறத்தாழ அறுநூறு அடைகள் காணப் படுகின்றன. அடைமொழிகளில் இடம்பெற்றுள்ள சீர்களின்

சிறுமை இரண்டு; பெருமை பதினெட்டு. பல்வேறு பொருள்களையும் விளக்கப் புகுந்தமையால், இவ்வடைகளும் பல்வேறு அளவினவாய் அமைந்துள்ளன.

கூந்தல்

பெண்களின் கூந்தலைச் சுட்டுவதற்கு வகைவகையான எண்ணற்ற அடைகளை அடிகள் தம் காப்பியத்தில் கூறுகிறார். இவைபோன்ற அடைகளைத் தொகுத்து வைத்துக் கொண்டால் அவற்றின் துணைகொண்டு மிக எளிதில் பல கவிதைகளை யாத்தல் கூடும்.

பல்லிருங் கூந்தல்
(2 : 65)

காரொலி கூந்தல்
(2 : 84; 23 : 173)

மையிருங் கூந்தல்
(4 : 56)

தண்ணறல் கூந்தல்
(4 : 74)

நாறிருங் கூந்தல்
(6 : 79)

புகையிற் புலர்த்திய பூமென் கூந்தல்
(6 : 80)

தகைமென் கூந்தல்
(8 : 100)

நறும்பல் கூந்தல்
(10 : 39; 12 : 3)

நாறைங் கூந்தல்
(10 : 43; 15 : 9)

மணமலி கூந்தல்
(12 : 46)

குறுநெறிக் கூந்தல்
(13 : 84)

தேமென் கூந்தல்
(15 : 133)

நறுமலர்க் கூந்தல்
(27 : 216)

அகிலுமை விரித்த அம்மென் கூந்தல்
(28 : 17)

இவையன்றிக் கூந்தலின் பரியாய சொற்களாகிய குழல், ஓதி முதலியவற்றையும் பல அடைகளோடு புணர்த்தி அடிகள் உணர்த்தியுள்ளார். இங்ஙனமே கண், கை, கால், முகம், இடை முதலிய பல்வேறு உறுப்புகளும் தக்க அடைமொழிகளால் குறிக்கப் பெற்றுள்ளன.

மக்கள்

ஆறறிவு பெற்ற அனைவரும் மக்கள் என்று அழைக்கப்பட்டாலும், அவரவர்களின் தொழிலுக்கும் வாழுமிடத்திற்கும் ஏற்ப அவரவர்களின் குணங்கள் மாறுபட்டு விளங்குதல் கண்கூடு. தக்க அடைமொழிகளின் மூலம் மாறுபட்ட மக்கள் இனத்தவரை அடிகள் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பொருள் கொண்டு புண்செயினல்லதை யார்க்கும்
அருளிலா எயினர்

(12 . 22; 1—2)

என்ற அடிகள் எயினரின் ஈரமற்ற நெஞ்சினை நன்கு புலப்படுத்துகின்றன.

ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர்

(23 : 67—70)

என்ற அடிகளில் ஒன்று முதல் ஆறுவரை உள்ள எண்களை வரிசையாக அமைத்து அந்தணர் இயல்பினை அடிகள் சித்தரித்துள்ளார்.

குழலினும் யாழினும் குரல்முதல் லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறல் மரபிற் பெரும் பாணர்

(5 : 35-37)

என்ற அடிகள் பாணரின் இயல்பினைத் தெள்ளிதின் விளக்கிநிற்பது உண்மை அல்லவா?

ஒளிப்பொருள்

உலகிற்கு ஒளி தரும் ஞாயிறையும் திங்களையும் பல்வேறு அடைகளைப் புணர்த்தி அடிகள் அணி செய்துள்ளார்

விரிகதிர் பரப்பி உலகமுழு தாண்ட
ஒருதனித் திகிரி உரவோன்

(4: 1-2)

என்று ஞாயிற்றைச் சுட்டிய அவர்

உலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்

என்று திங்களைக் காட்டுகிறார்

மலர்கள்

பல்வேறு மலர்களும், அவற்றின் வடிவும் வண்ணமும் புலப்படும்படி அடைகளின் துணைகொண்டு அடிகளால் உணர்த்தப்பட்டுள்ளமையைக் கீழ்வரும் சான்றுகள் புலப்படுத்தும்

அரும்புபொதி அவிழ்ந்த சுரும்புஇமிர் தாமரை

(2 : 15)

வெண்தோட்டு மல்லிகை
(2 : 33)

உள்ளகம் நறுந்தா துறைப்ப மீதழிந்து
கள்ளுக நடுங்கும் கழுநீர்
(5 : 235-236)

கடற்புலவு கடிந்த மடற்பூந் தாழை
(6 : 166)

தண்ணறு முல்லை
(14 : 76)

வண்டுண மலர்ந்த மணித் தோட்டுக் குவளை
(27 : 234)

புள்ளும் விலங்கும்

மாயிருபீலி மணிநிற மஞ்ஞை
(2 : 53)

தேன்மொழிக் கிள்ளை
(25 · 54)

எனப் பறவைகளை விளக்கிய இளங்கோ,

பெருஞ்சினம் பிறழாக் கடக் களிறு
(15: 52-53)

வாள்வரி வேங்கை
(13 : 6)

என விலங்குகளையும் அவற்றின் இயல்பும் வடிவும் புலப்படத் தீட்டிக் காட்டியுள்ளார்.

அமளி

உயிர்ப்பொருள்களே யன்றி உயிரல் பொருள்களுக்கும் அடைகள் தந்து கூறுவதில் வல்லவர் இளங்கோவடிகள் என்பதை அமளிக்கு அவர் தரும் அடைகள் கொண்டு அறியலாம்

மங்கல நல்லமளி
(1: 64)

அரிமான் ஏந்திய அமளி
(20 : 22; 25: 78)

முடிவுரை

பன்னூறு அடைகளை இடம் தெரிந்து, தேவை உணர்ந்து, பொருள் புரிந்து அமைத்தல் அடிகள் போன்ற அறிஞர்களுக்கே இயலுவதாகும். சொற்கள், அடிகள் பிறப்பிக்கும் ஆணைகளை நிறைவேற்றத் தாமே முன்வந்து நின்றிருக்க வேண்டும் என்றே எண்ணத் தோன்றுகிறது. இவ்வடைகள் எல்லாவற்றையும் தனித் தனித் தலைப்புகளில் வகுத்துத் தொகுத்தல் ஆராய்ச்சியாளர்க்குப் பெரும் பயன்தரக் கூடியதாகும்.

—(✻)—

கவிஞன் நோக்கு

—தஞ்சை பா. இறையரசன்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

5. நோக்கு. வாக்கு:

நோக்குவது வாக்காகிறது. நிறைமொழி மாந்தர் (நோக்குப்) பெருமையன்றோ மறைமொழி (வாக்கு)! வாக்கு (கவிதை, கலை) சுவைப்பவனிடம் நோக்காகிறது. அகக் கண்மூடிகள் சலை யுரைத்த கற்பனையை நிலையெனக் கொண்டாடுவர். 'தாமின் புறுவது உலகின்புற' 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்று தம் நோக்கை வாக்காக்கிப் பாடியவர் புலவர். கவிஞர் புதுவழியிலே புது முறையிலே பொருள்களைக் காண்பதே கவிதை (ஏ. சி. பிராட்லி.) 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' என்பது ஊனக்கண்ணால் காணமுடியாத கடவுளைக் குறித்து. மற்றுக் கண்டு விண்ட கண்டு கொண்டு கண்டு சுவைக்க வேண்டும் - இலக்கியத்தில்! காணாது காட்டுவதும் பேசுவதும் மாணாது! அஃது ஆண்வாடை வீசாத பெண் சூலுறாது பெற்ற பிள்ளைமானும். ''நோக்கிற்கு நக்கீர தேவர்'' எனப்பட்டதாலோ இறைவன் (அறிவுத்) தீ நோக்கிற்கு ஆளானார் நக்கீரர்! (பிறசமயத்) தாக்கில் திருஞான சம்பந்தர்'' எனப் படினும் கவி நோக்கில் ஆழ்ந்தவர் காழிப்பிள்ளையார்.

6 நோக்கு மூன்று; நாக்கு ஒன்று:

கவிஞன் ஆழ்ந்து பார்க்கிறான்; உறழ்ந்து பார்க்கிறான்; பிறழ்ந்து பார்க்கிறான் — என்ற நோக்கு மூன்றும் திருஞான சம்பந்தர் நாக்கில் ஒன்றுவது காண்பாம்.

''ஊடினால்இனி யாவதென்னுயர்
நெஞ்சமே வல்வினைக்
கோடி நீயுழல் கின்றதென்
அழல்அன்றுதன் கையிலேந்தினான்
பீடுநேர்ந்தது கொள்கையான்
பிரமாபுரத் துறைவேதியன்
ஏடுநேர் மதி யோடராவணி
எந்தையென்று நின்றேந்திடே''

'நாயக நாயகி பாவத்தில்' அமைந்த பக்திப் பனுவலிது.

உயர்வான நெஞ்சமே! ஊடி என்ன பயன்? வினையலைப்ப நீ ஒடி (வல்வினைக்கு + ஒடி) உழல்கின்றதேன்? அழாதே! அன்று என்னைத் தன் கையில் ஏந்திய தலைவன் காப்பான். கற்பாம் பீடு எனக்கு நேர்ந்தது; அவன் எவ்வினை எக்காலும் முக்காலும் கொன்னும் கையினான் (கொள் + கையன்). அந்தணன். ஒலிக்கும் கழல் அணிந்தவன். மலர் அன்ன மனம் (ஏடு நேர் மதி) உடையவன் எம் தலைவன் என்று புகழ்வாயாக!'

கவிஞனின் ஆழ்ந்த கவிப்பார்வை பக்தியை இவ்வாறு உள்ளே வைத்துள்ளது 'என்னிறைவன் உறையும் உயர்வான நெஞ்சமே! வந்துறும் வல்வினைக் கோடிகளில் (கோடி வல்வினைகளில்) உழல் கின்றதேன்? அதனாலன்றோ அவன் நீங்கியிருக்கிறான். ஊடி வாடி என்ன பயன்? வல்வினை வளைந்து (கோடி) பின்னும் உழல்வதேன்? நம் வல்வினையை வளைத்திட்டான்; பீடு நேர்ந்தது! பீடு நேர்ந்து அது தன் கொள்கையாக உடையான் அந்தணன். மறைமொழிபோல் மதிக்கதிரும் (ஏடு நேர் மதி) அரவணியும் கொண்டான் அவன். அரவணிகண்டு அஞ்சாமல், எளியன் என்று இகழாமல் அணுகினல் மறைமதி ஒளி பெறலாம்.'

என்ன ஆழம்! 'அகல உழுவதை விட ஆழ உழுவது மேல்' அல்லவா! ஆழ்ந்து பார்ப்பதோடு அகலமாக நோக்குவதும் கவிப் பண்பு!

''ஞானத்திரளாய் நின்றபெருமான்
நல்லஅடியார்மேல்
ஊனத்திரளை நீக்கும்அதுவும்
உண்மைப் பொருள்போலும்
ஏனத்திரளோ டிளமான்கரடி
இழியும் இரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையும்சாரல்
அண்ணா மலையாரே''

ஞானத்திரளாம் ஆண்டவன் ஊனத்திரளாம் அடியாருடன் கூடு வதை ஞானத்திரள் முதலியவற்றுடன் ஆனை கூடுவதை உவமை செய்கிறார் கவிஞர். இருளால் அறியாது சிற்றுயிருடன் சார்ந்து நின்றது மாமதயானை. அருளால் கருதாது அடியாருடன் கலந்தது உண்மைப் பொருள். ஆனை தான் வந்தணைந்தது; ஆனையுரி போர்த்தானும் அன்பர்பால் வந்தணைந்தது தன் அருட் பெருக்கால். கலந்து வாழும் சாரலின் தலைவன் கலக்காமல்

இருப்பானா? விலங்குகளாதலின் உடல் வேறுபாடு அறியாது நின்றன; விளங்கு காதலின் ஊனத் திரளும் போக்கினான் இறைவன். இவ்வாறு பலவாறாய் உறழ்ந்து ஒப்பிட்டுப் பார்த்துப் பேசுகிறார் திருஞான சம்பந்தர்

"இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோ எமையாளு மாறீ வதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே."

பிறழ்ந்து—வேறுபடுத்திப் பார்த்துப் பாடும் பாடலிது ஒப்பிட்டே வேறுபாடு காண முடியும். தனக்கும் ஒப்பிலாத் தகைமையையும் நஞ்சுண்டான் தன்நெஞ்சாண்டானென்ன என்று ஒப்புமையையும் பிறழ்ந்து பேசுகிருர். நீ நஞ்சடக்கினாய். நான் நெஞ்சடக்கினேன். நீ அடக்கினாய்; நான் எழுவேன். உனக்கோ அமுதொடு நஞ்சு வந்தது; எனக்கோ துன்பத்தொடு உறுநோய் வந்தது. [உன் ஒருபாதி (பெண்) அமிழ்தம்; என்னிருபாதியும் (ஆண்) அவம் என்பதாலா?]. நீ அடக்கி ஆள்பவன்; நான் தொழுது எழுபவன், நீ வேதியன் நான் பேதையன். நீ அடக்கியது உன் நஞ்சையன்றி அருள் நெஞ்சையன்லவே! நீ ஈயாமல் அருளேது?'

என்றெல்லாம் சம்பந்தர் பேசுவது அவர் ஆழ்ந்து உறழ்ந்து பிறழ்ந்து அறிந்த பெற்றியால் அன்றோ! நோக்கு மூன்றும் ஒன்றையொன்று அடியொற்றியன. நீரில் இறங்கல், மூழ்கல், முத்தெடுத்தல் போல என்னலாம்.

7 நோக்கு மூன்று; நாக்கு மூன்று:

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பள்ளிப்பாட நூலைத் திருத்தி வெளியிடுங்கால், கிளிக்கு முன்னிரு விரல் பின்னிரு விரல் என்றும், மணிப் பொறியில் நான்கு என்ற எண் உரோம எண்ணில் நான்கு கோடுகளாகவே இடப்படும் என்றும் ஒவியர்க்கு உணர்த்தினார். இது ஆழ்ந்து பார்க்கும் கவியுளம் பெற்றிருந்ததால்தான், அற்பப் பொருளும் அற்புதப் பொருளாய்த் தோன்றக் காரணம் ஆழ்ந்த பார்வையாலன்றோ!

''நிலையாப் பொருளை உடலாக் கருதி
நெடுநாட் பொழுதும் அவமேபோய்
நிறைபோய்ச் செவிடு குருடாய்ப் பிணிகள்
நிறைவாய்ப் பொறிகள் தடுமாறி
மலநீர்ச் சயன மிசையாப் பெருகி
மடிவேற் குரிய நெறியாக
மறைபோற் றரியஒளி யாய்ப்பரவு
மலர்த்தாள் கமலம் அருள்வாயே

என்ற அருணகிரிநாதரின் அருள்வாக்கு ஆழ்ந்த நோக்கில் மண்ணையும் விண்ணையும் பார்த்ததால் மலர்ந்தது

பறவைபோல் பறந்தாலென்ன, மீன்போல நீந்தினாலென்ன என்றெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்த உள்ளங்கள் விண்ணூர்திகளையும் கப்பல்களையும் கண்டன.

''பூட்டைத் திறப்பது கையாலே—நல்ல
மனந்திறப்பது மதியாலே
பாட்டைத் திறப்பது பண்ணாலே—இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே''

எனப் பாரதியார் பூட்டும் பாட்டும் மனமும் மனையுமாக உறழ்கிறார்

பழுத்துக் கீழே விழுந்த ஆப்பிள் பழத்தைக் கண்ணுற்ற நியூட்டன் 'இப்பழம் ஏன் கீழே விழுகிறது? ஏன் மேலே செல்லவில்லை?' என்று பிறழ்ந்து உறழ்ந்து ஆய்வுப் பயன் கண்டார். கவிஞனும் பிறழ்ந்து உறழ்கிறான். தீ சுடும்; அதுவும் நெருங்கினால், தொட்டால் மிகச்சுடும்; அகன்றால் தீக்காய்வு நீங்கும். இது இயற்கை. இதனைப் பிறழ்ந்து நோக்குகிறான் கவிஞன்:

''நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்
ணென்னும் தீ
யாண்டுப் பெற்றாள் இவள்''

(குறள், 1104)

நீங்கினால் சுடுகிறது; நெருங்கினால் குளிர்ச்சியூட்டுகிறது -இந்தத் தீ. கற்புத் தீ சான்ற தண்மைப் பெண்மை களவுக் காதல் தீயாகச் சுடர்விடுகிறது வள்ளுவத் தலைவனுக்கு. காதலன் உள்ளத்துக் காதல் தீயை காதலியின் மேலேற்றிக் கூறுவதும் பிறழ்ச்சியன்றோ!

8 பா ஒன்று, நா ஒன்று:

''கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்
மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான்--மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயாப்புகழ் கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு''

என்று குமரகுருபரர் மலரவனையும் புலவர்களையும் ஆழ்ந்து நோக்கி, உறழ்ந்து பார்த்துப், பிறழ்ந்து — வேறுபடுத்திக் காட்டுகிறார்.

9 நோக்குக்கு நோக்கு:

கவிஞன் நோக்கை நாம் நோக்க, கவிஞன் போலவே நாமும் ஆழ்ந்தும் உறழ்ந்தும் பிறழ்ந்தும் பார்த்தால்தான் சுவைக்கலாம். 'கற்றோரைக் கற்றோரே காமுறுவர்'; சிறப்பு நோக்கு உடைய கவிஞனை நோக்க நாமும் சிறப்பு நோக்குறல் வேண்டும். 'பொது நோக்கு ஒழிந்தி புலவர் மாட்டே'. தன் ஒவ்வொரு சிறு நோக்கிலும் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என நிறுத்தி மயங்க வைக்கும் 'இந்திரசாலம்' விளைப்பவன் கவிஞன். 'ஆழ்ந்து நிற்கும் கவியுளம்' எனும் திருத்தார் நன்று' என்பார் ஆய்வு அறிவுத் 'தீ' யார். மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி எனும் ஐந்தையும் நோக்குவது நோக்கு என்பர் தொல்காப்பியர். (செய். 104). யாதானும் ஒன்றைத் தொடுக்குங்கால் கருதிய பொருள் முடியுங்காறும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்றல்' என்று உரையாசிரியரும், 'பலவும் நோக்கி உணர்தற்குக் கருவியாகிய சொல்லும் பொருளும் எல்லாம் மாத்திரை முதலா அடிநிலைகாறுமென அடங்கக் கூறி நோக்குதற் காரணம் நோக்கென்றானென்பது' என்று பேராசிரியரும் கூறுவர். முதல்வர் பா வார்ப்பதையும் அடுத்தவர் பா ஆர்ப்பதையும் கொண்டார். உரையுள் அவர் பெரிதும் விரித்து மொழிவது பொருள்கோள் முறைமையில் சொற்சுவை பொருட்சுவை, அணி நலம், உவமைவளம் ஆயனகொள்ளுமாறே. அவை விரிப்பின் பெருகும் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு தானை கொண்டன்னதுடைத்து'. 'பாலின் சுவையெல்லாம் யானும் பகரவல்லேனோ'. காதற்சுவையைக் காதலித்துத் தானே அறியலாம். நோக்கெதிர் நோக்குக. 'நோக்கொக்கின்' சுவைப் பொருளும் சுவைத்தோனும் என இருநிலம்' ஆய இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்துக.

—(o)—

இரங்கற் கூட்டம்

முதுபெரும் புலவர் உரைவேந்தர் சித்தாந்த கலாநிதி
ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்களின்
மறைவு குறித்துத் தமிழ்ச்சங்கச் சார்பில்
கல்வி நிலையங்களின் ஆசிரியர்களும் மாணவ மாணவியரும்
தமிழ்ப்பேரன்பர்களும் கலந்து கொண்டதொரு இரங்கற் கூட்டம்
10—4—1981 மாலை தமிழ்ச்சங்கப் பெருமன்றத்தில் நிகழ்ந்தது.

அதுபோழ்து கரந்தைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு. அரங்க. வே. சுப்பிரமணியனார் தலைமையில் திரு புலவர் மீனு இராமதாசு, புலவர் இரா. கணேசன், புலவர் பி. விருத்தாசலம் முதலியோரும் செயற்குழு உறுப்பினர் திரு ச. இராமநாதன் அவர்களும் ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்களின் சீரிய பண்புகளையும் சங்கத்திற்கும் அவருக்கும் அமைந்த நீண்ட தொடர்பினையும் அவர்தம் கல்வி முதலாய சிறப்புக்களையும் நினைவுகூர்ந்து உரையாற்றினர்.

பின்னர் ஔவை அவர்களின் பல்வேறு பணிச்சிறப்புக்களையும் பண்பு நலன்களையும் குறித்து திரு க. பூரணச்சந்திரன், புலவர் தொல்காப்பியன், பாவலரேறு ச. பாலசுந்தரம் ஆகியோர் கையறுநிலைப் பாமாலை சூட்டி உரையாற்றினர். இறுதியாக இரங்கற்பாமாலை படிக்கப் பெற்றது. பின்னர் அவர்தம் நல்லுயிர் இன்ப அமைதியுறவேண்டி யாவரும் வணக்கம் செலுத்தினர்.

தமிழ் வாழ்க
"தோன்றிற் புகழொடு தோன்றுக"
முதுபெரும்புலவர் உரைவேந்தர் சித்தாந்த கலாநிதி
ஔவை சு. துரைசாமிபிள்ளை
அவர்கள்
மறைந்தமைக் கிரங்கிக்
கரந்தைத் தமிழ்சங்க சார்பில் 10—4—'81 ஆம்நாள்
நிகழ்ந்த இரங்கற் கூட்டத்தில்
வருந்தி யுரைத்த

கையறு நிலை

1 எழுத்தொடுசொற் பொருளியலின் மரபு தேறி
இலக்கியப்பே ராழ்நிலை கண்டுணர்ந்து

பழுத்தசுவைப் புலமையினுற் பைந்தமிழ்ச்சீர்
பாரறியப் பதம்பதமாப் பகுத்துணர்த்தி
விழுத்தகவால் பண்டையுரை யாசான்மாரின்
விழுதாகத் திகழ்ந்தோய்! எப்ஓளவைஎன்று
வழுத்திதமிழ் முழுதறியும் மாணுக் கர்வாய்
மடித்துமனங் கசிந்தழநீ மறைந்ததென்னே?

2 உரையாளர் யாவருமோர் உருவாய்வந்த
தொப்பதுரை சாமியென வந்தோய்! ஈன்றுப்
புரையாரும் இலராகப் புகழைத் தாங்கிப்
பொருவில்பல நூற்கரிய பொருள்பு கன்ருய்!
வரையாது வண்டமிழ்நூற் குரைவ ரைந்து
வாழ்வாங்கு வாழ்ந்தொழுக்கங் காட்டி நின்ருய்
கரையாருத் துயர்க்கடலுள் எம்மை ஆழ்த்திக்
கண்ணுதலோன் பாற்கடந்தாய் கருணை ஈதோ?

3 திருமுறைவாழ் தெய்விகப் பொருளைத் தேர்ந்து
தேறலென எமக்களித்துச் சேக்கிழார்நூல்
தருமுறையைச் சால்பொளிரச் சாற்றிச் சங்கத்
தமிழமிழ்தைத் தருப்புரையத் தந்து,சார்ந்தார்
குருமுறையாக் கொளத்திகழ்ந்த புலவர்கோவே!
குணக்கடலே! பணிக்கதிரே! அறிவுத்திங்காள்!
உருமறையா துடல்மறைந்தெங் ககன்ருய்!யாங்கள்
உறுதுயர்கா ணுதுயர்ந்தோர் உலகுற்ருயோ?

4 நாட்டாரும் கவியரசும் தமிழவேளும்
நயக்கநறுந் தமிழ்ப்பணிசெய் துயர்ந்தெம்
[மோர்க்குக்
காட்டாகத் திகழ்ந்த கருணீகர்வேந்தே!
கனிந்தமொழி புகன்றெம்மைக் கவர்ந்தமேலோய்

பாட்டாலும் உரையாலும் தமிழ்வளர்த்த
பாவல!செந் நாவல!நின் திருநாமத்தைக்
கேட்டாலும் தமிழுணர்வு மணக்குமே,நீ
கேளாமல் எமைப்பிரிதல் கேண்மையாமோ?

5 தத்துவநூற் கல்வியிலே தலைசிறந்து
தருசைவ சித்தாந்த கலாநிதிப்பேர்
வித்தகரால் தரப்பெற்ற உரைவேந்தே!நின்
வீறுமிகு வாயுரையை என்றுகேட்போம?
பத்திமையும் பண்பாடும் ஒருங்கேபெற்ற
பைந்தமிழ்ப்பே ராசானே! ஐயா!நின்சீர்
எத்திசையும் கமழஇனி திறைவன் தாளில்
இருந்தருள்க எனப்போற்றிப் பணிகுதும்யாம்

6 மெய்கண்ட நூல்புகலும் மெய்ம்மை தேர்ந்து
விளக்கியநின் சித்தாந்தப் புலமையாலே
பொய்விண்ட வாதிகளின் பூசலைமாற்றிப்
பொருள்காணச் செய்தகலைச் செல்வ!நாளும்
மய்யுண்ட கண்டத்தான் மலர்த்தாள் போற்றி
வளர்சைவ நெறிமகிழ்ந்து வாழ்ந்த நல்லோய்!
நெய்யுண்ட திரிஒளியாய் எமதுநெஞ்சில்
நிறைந்திருக்க வேண்டிகசிந் தேத்துகின்றோம்

———o———

தஞ்சாவூர்,
10—4—1981

இங்ஙனம்,
*கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார்.

*கரந்தைத் தமிழ்ச்சங்க இரங்கற் கூட்டத்திற் சங்கச் சார்பில் பாவலர் ச. பாலசுந்தரம் அவர்கள் உரைத்த இரங்கற் பாமாலை.

நாட்டுப்புறக் கதைகள் – ஒரு வரையறை

அ. ம. சத்தியமூர்த்தி,
கலையியல் நிறைஞர், ஆய்வியல் நிறைஞர், சுவடியியல் நிறைசான்றிதழ்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

முன்னுரை

ஒரு நாட்டின் உயிர்த்துடிப்பையே தன்னகத்து அடக்கிய மாபெரும் சக்தியாக விளங்குவது நாட்டுப்புறமாகும். இந்நாட்டுப் புறத்தில் வாழும் மக்களின் பண்பாடு, கலை, இலக்கியம் முதலான வற்றின் முழு வடிவமாகத் திகழ்வது நாட்டுப்புற இயலாகும். இவ் வியலின் ஒரு கூறான நாட்டுப்புற இலக்கியத்தைப் பாடல்கள், கதைகள், விடுகதைகள் (புதிர்கள்), பழமொழிகள் எனப் பகுப்பர்.[1] இப்பகுப்பில் ஒன்றாக அமைந்த நாட்டுப்புறக் கதை இலக்கியம் பற்றியதொரு வரையறையைக் காண முயல்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

கதை–பொருள் விளக்கம்

கதை என்ற சொல்லுக்கு கட்டியுரைத்தல் விசித்திர செய்திகளைப் பெற்றிருத்தல், சொல்லுதல் (Communication), உரையாடல், பொய் வார்த்தை என்று பல பொருள் விளக்கங்கள் தரப் படுகின்றன.[2] ஆயினும் நமது நாட்டுப்புறக் கதைகளைப் பொறுத்த வரை கதை என்பதற்குச் சொல்லுதல் அல்லது உரைத்தல் என்று பொருளுரைப்பதே பொருத்தமுடைய ஒன்றாகும்.

கதைகளின் தோற்றத்திற்கான காரணம்

'உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் கதைகள் இருக்கின்றன கதைகளுக்குரிய வசீகர சக்தி எங்கும் எல்லாக் காலத்தும் எல்லாப் பருவத்திலும் மிகுதியாகவே உள்ளது.......'[3] இத்தகைய கதைகள் தோன்றுவதற்கான காரணங்களாக (1) இன்புறுத்தல் (2) அறமுரைத்தல் (3) பொழுது போக்கல் ஆகிய மூன்றினையும் காட்டலாம்.

தொன்மை நூல்களில் நாட்டுப்புறக் கதைக்கூறுகள்

உரைநடையின் வகைகளைக் கூறவந்த தொல்காப்பியர்,

"... ... ...
பொருளொடு புணரா பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
... ...'

(தொல். பொருள். செய். நூ. 475)

எனக் காட்டும் இரண்டினையும் கதைகளாகச் சுட்டுவார் இலக்கியத் திறனி ஒருவர்.[4]

சங்க இலக்கியம் முதலாக இன்றைய இலக்கியம் ஈறாக பலவற் றுள்ளும் கதைகள் பல பரந்து காணப்படுவதை இலக்கியப் புலமை யுடையார் அறிவர். இவற்றுள் தனியொரு புலவரால் படைக்கப் பட்ட காப்பிய, இதிகாச, புராணக் கதைகள் யாவை, நாட்டுப் புறக் கதைகள் யாவை என்று இனம் பிரித்து உணரவேண்டியது/ உணர்த்த வேண்டியது நமது கடமையாக உள்ளது.

நாட்டுப்புறக் கதைகளின் வகைகள்

நாட்டுப்புறக் கதைகளைப் பொதுவாக,

1 கதைப் பாடல்கள்
2 கதைகள்
3 விடுகதைகள்

என மூவகையாகப் பகுக்கலாம்.

நாட்டுப்புறக் கதைகள் அவற்றின் யாப்பு அடிப்படையில் (1) பாட்டு (2) உரை எனும் இருவகையில் அடங்கும். செய் யுள் வடிவில் உள்ளவை கதைப்பாடல்கள் என்றும் உரைநடை வள்ளவை கதைகள் என்றும் பெயர் பெறும்.

விடுகதையில் நாட்டுப்புறக் கதைக் கருத்துகள்

தொல்காப்பியர் காலத்தில் விடுகதை இருந்ததற்கான சான்றாக,

'... ... ...
தொடியொடு புணர்ந்த பிசியி னான
... ...'

(தொல். பொருள். செய். 467)

எனும் அடியைக் காட்டுவர்.[5] தொல்காப்பியத்தில் இதன்நிலை இவ்வாறிருக்க, 'விடுகதை' எனும் சொல்லிலேயே 'கதை' எனும் சொல்லமைப்பினைக் காண முடிகிறது. ஆயினும் விடுகதைகள் அனைத்திலும் கதை அமைப்பினைக் காண முடியவில்லை. சில விடு

கதைகளில் சமுதாயச் செய்திகள் அல்லது சமுதாயக் கதைகள் விடுவிக்கப்பட வேண்டிய புதிராக உருவெடுத்திருப்பதையும் காண முடிகிறது.

எவ்வளவு கூட்டம் இருந்தபோதும் மூத்தவர்களின் உதவி இல்லாவிடில் இளையவர்கள் துன்பப்பட நேரிடும் எனுங் சமுதாய உண்மை /கதை நிகழ்ச்சி விடுகதை ஒன்றிற்குக் கருவாக அமைந்திருப்பதை,

அண்ணன் தம்பி ஐவர்
அண்ணன் ஆதரவு இல்லாவிட்டால்
தம்பிமார்பாடு திண்டாட்டம் -- அதுஎன்ன?[6]

(விடை — கையின் பெருவிரல்) எனவரும் விடுகதைப் பகுதியால் அறியலாம்.

மேற்கண்ட செய்திகளால் விடுகதைகள் அனைத்தும் கதைகள் ஆகா என்பதும், ஆயினும் விடுகதைகளில் கதைக் கூறுகள் அமைவது உண்டு என்பதும் விளங்கும். ஆகையால் விடுகதைகளில் காணப்படும் கதைகளைப் பிரித்துணர வேண்டும்.

பழமொழிகளில் கதைக் கூறுகள்

பழமொழியைத் தொல்காப்பியம் 'முதுமொழி'[7] எனச் சுட்டும் நமக்குக் கிடைக்கும் முதல் பழமொழித் தொகுப்பு பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றான பழமொழி நானூறு'ம். விடுகதைகளில் காணப்படுவது போலவே கதை நிகழ்ச்சிகள் சுருங்கி முதுமொழிகளாக—சொல்லடைவுகளாக—பழமொழிகளாக உருவெடுத்தலும் உண்டு. இதற்குச் சான்றாக,

அசத்துக்கு வாழ்க்கைப்பட்டு
ஆயிரம் வருடம் வாழ்வதைவிட
சத்துக்கு வாழ்க்கைப் பட்டுச்
சட்டென்று தாலியறுப்பதே மேல்

எனும் பழமொழியைக் காட்டலாம். இங்கு சமுதாய மக்களின் வாழ்க்கையே — வாழ்க்கை அனுபவமே — கதை நிகழ்ச்சியே சுருங்கிப் பழமொழியாக உருவெடுத்தமையையும் காணமுடிகிறது

கதைகளும் கதைப் பாடல்களும்

கதைகளை,

1 மனிதக் கதைகள் 2 மிருகக் கதைகள்
3 மந்திரக் கதைகள் 4 தெய்வக் கதைகள்.

என்று நான்கு வகையாகவும்,[8] கதைப்பாடல்களை

1 காப்பியத் துணுக்குக் கதைகள்

2 புராணத் தொடர்பான கதைகள்

3 கொடுந் தெய்வக் கதைகள்

4 வரலாற்றுப் பாங்கான கதைகள்

5 சமுதாயப் பாங்கான கதைகள்

என்று ஐவகையாகவும்[9] பாகுபாடு செய்வர். இவற்றுள் காப்பிய புராண இதிகாசத் தொடர்பானவைகளை நாம் நாட்டுப்புறக் கதைகள் எனக் குறிப்பதற்கில்லை. ஏனெனில் இக்கதைகளுக்கு முன்பே ஒரு முழுமையான, தனி ஒருவரால் படைக்கப்பட்ட இலக்கிய வடிவம் உண்டு. எனவே இவைகளை நாட்டுப்புறக் கதைகள் என்பதற்கில்லை. ஆயினும் இவற்றில் நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் உள்ளன என்பதனையும் மறுப்பதற்கில்லை. நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் சிலவற்றைப் பெற்றதெல்லாம் நாட்டுப்புற இலக்கியமாகி விடுவதும் இல்லை

கதைக்கும் கதைப் பாடலுக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு அவற்றின் யாப்பு முறையே ஆகும். மேலும் கதைகள் அளவில் சிறியனவாகக் காணப்படும். கதைப் பாடல்கள் மிக நீளமாகக் கூட இருக்கும். ஆயினும் கதைகள் பாடல் வடிவிலும் இருக்கலாம் என்பது இவண் சுட்டத்தக்கது.

நாட்டுப்புறக் கதைகள் சில வரையறைகள்

1 நாட்டுப்புறக் கதைகள் உரைநடையிலும் அமையும், செய்யுள் நடையிலும் அமையும்.

2 கதைகள், கதைப்பாடல்கள் இரண்டிலும் நாட்டுப்புறக் கதைகள் இடம் பெறும்

3 விடுகதைகள், பழமொழிகள் முதலானவற்றிலும் நாட்டுப்புறக் கதைக்கரு காணப்படுவதும் உண்டு

4 அளவினுல் பெரும்பாலும் கதைகள் சிறியவைக ளாகவும் கதைப்பாடல்கள் பெரியவைகளாகவும் அமையும்

5 பெரும்பாலும் சமுதாயச் செய்திகளை, சமுதாயத்தின் பொதுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு எழுபவை நாட்டுப்புறக் கதைகள்.

6 நாட்டுப்புறக் கதைகள் நிச்சயமாக தனி ஒருவரால் இயற்றப்பட்டதாக முடியாது. மாறாக அது சமுதாயத்தின் பொதுநிலையில் உருவாகுவது என்று விளக்கலாம்

7 முன்பே இலக்கிய வடிவு பெற்றதும், தனி ஒருவரால் இயற்றப்பெற்றதுமான காப்பிய, புராண, இதிகாசக் கதைகள் நாட்டுப்புற மக்களிடம் வாய்மொழியாக சிறிது மாற்றம் பெற்று வழங்கினாலும், அவை முழுமையான நாட்டுப்புறக் கதைகளாகாது என்றும் உரைத்தல் வேண்டும்

முடிவுரை

இதுகாறும் கதை, நாட்டுப்புறக் கதை என்பவைகளுக்கான விளக்கங்களைக் கண்டதுடன், கதையின் அடிப்படைக் கூறுகள் பிற நாட்டுப்புற இலக்கிய வகைகளிலும் காணப்படும் என்றும், காப்பிய புராண இதிகாசக் கதைகள் நாட்டுப்புறக் கதைகளுள் அடங்கா என்றும் அறிந்தோம். எனவே நாட்டுப்புறக் கதைகளை இனம் பிரித்து உணர்ந்து, அவற்றின் சிறப்புகளை உணர்த்த வேண்டியது ஆய்வாளரின் கடமையாகும்

பின் குறிப்புகள்:

1 இராமநாதன். ஆறு., தமிழில் புதிர்கள்—ஓர் ஆய்வு. சமுதாயச் சிற்பிகள் வெளியீட்டகம். மஞ்சக் கொல்லை—608601, 1978, ப-ம். 1.

2 சென்னைப் பல்கலைக்கழகம். தமிழ் லெக்சிகன் தொகுதி 2 பகுதி 1, 1962, ப-ம் 714

3 வையாபுரிப் பிள்ளை, எஸ்., 'கதைப்பாட்டு' தமிழர் பண்பாடு. தமிழ்ப்புத்தகாலயம். சென்னை-5, ஏழாம் பதிப்பு, 1968, ப-ம். 71

4 சண்முகசுந்தரம், சு., நாட்டுப்புற இயல் — ஓர் அறிமுகம் இலக்கிய மாணவர் வெளியீடு, சென்னை, 1975, ப-ம் 80.

5 சுப்பிரமணியன் டாக்டர் ச. வே. (பதிப்), தமிழில் விடுகதைகள், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அடையாறு

6 சுப்பிரமணியன் டாக்டர் ச. வே. (பதிப்), தமிழில் விடுகதைகள். ப-ம் 8.

7 தொல்காப்பியர், தொல்காப்பியம், ஒப்பியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை-17, 1975, பொருளதிகாரம் செய்யுளியல் நூ. 479

8 சண்முகசுந்தரம். சு., நாட்டுப்புற இயல்—ஓர் அறிமுகம். ப-ம் 82

9 Vanamamalai. N.. Studies in Tamil Folk Literature, New Century Book House Ltd., 1967, p. 110

———o———

Statement about ownership and other particulars about Newspaper
TAMIL POZHIL
Form IV

1.	Place of Publication	:	Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thajavur-2
2.	Periodicity of its Publication	:	Monthly
3.	Printer's Name	:	Thirumathi S. Nirmala, Proprietor, Annai Achagam
	Nationality	:	Indian
	Address	:	1734. Gandhiji Road, Karunthattamkudi. Thanjavur-613 002
4.	Publisher's Name	:	Thiru; V. Subramaniam, B.A.
	Nationality	.	Indian
	Address	:	Thiru. V. Subramaniam, B. A. Secretary. Karanthai Tamil Sangam, Thanjavur-613 002
5.	Editor's Name	:	Thiru. V. Subramaniam, B.A,
	Nationality	:	Indian
	Address	,	Secretary, Karanthai Tamil Sangam Karunthattamkudi Thanjavur-613 002
6.	Name and address of individuals who own the newspaper and partners	:	Karanthai Tamil Sangam (Regd.) Karunthattamkudi Thanjavur Pin : 613 002

I. V. Subramaniam hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. SUBRAMANIAM.
Publisher.